*2*

# தண்ணீரை வற்றிப்போகச் செய்தது யார்?

## (1 இராஜாக்ரள் 17:1–15)

*உங்கள் வீட்டில் எப்போதாவது தண்ணீர் வற்றிப்போன நிகழ்ச்சியை நீங்கள் கொண்டிருந்து இருக்கிறீர்களா? ஒருவேளை தண்ணீர்க் குழாயில் உடைப்பு ஏற்பட்டிருக்கலாம். ஒருவேளை பழுது பார்க்கும் மனிதர்கள் குழாய் வழியொன்றைப் பழுதுநீக்குவதற்காகத் தண்ணீரை அடைத்திருக்கலாம். ஒருவேளை குழாயில் நீர் உறைந்துபோயிருக்கலாம். ஒருவேளை உங்கள் மனைவி (அல்லது கணவர்) தண்ணீருக்கான வரியைச் செலுத்த மறந்துபோயிருக்கலாம்!*

*இது எப்போழுதாவது உங்களுக்கு நடந்திருந்தால், மிகவும் அசந்தர்ப்ப மான வேளையில் இது நடந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை: நீங்கள் சவரம் செய்துகொண்டிருந்து, அந்த வேலை பாதி நடந்திருந்தபோது, நீங்கள் உங்கள் முடியைக் கழுவி, முடியில் எல்லாம் சோப்பு நுரை இருக்கும்போது, அல்லது நீங்கள் ஒரு சாரல் குளியல் குளித்துக்கொண்டிருந்தபோது மற்றும் தலையிலிருந்து பாதங்கள் வரையிலும் சோப்பினால் நீங்கள் மூடப்பட்டிருக்கும்போது நடந்திருக்கலாம்!*

*இது எப்போதாவது உங்களுக்கு நடந்திருந்தால், நீங்கள் உடனடியாக இரண்டு கேள்வியைக் கொண்டிருந்து இருப்பீர்கள்: (1) “தண்ணீரை அடைத்தது யார்?” மற்றும் (2) “ஏன்?”*

*1 இராஜாக்கள் 17:1-15ன் சந்தர்ப்பப்பொருளில் நாம், “ஏன்?” என்ற கேள்வியை வலியுறுத்துவோமாக. அது கையாளக் கடினமான சூழ்நிலை ஒன்றை நாம் கொண்டிருக்கையில் எழும் கேள்வியாக உள்ளது. “கர்த்தாவே, இது ஏன் நடைபெற வேண்டியுள்ளது?” “கர்த்தாவே, எனது பெற்றோர் (அல்லது குழந்தை அல்லது நண்பர்) ஏன் மரிக்க வேண்டிருந்தது?” “கர்த்தாவே, உமக்கு ஊழியம் செய்வதற்கு என்னால் இயன்ற அளவு மிகச் சிறப்பாக முயற்சி செய்கிறேன், எனவே எனக்கு இந்தப் பயங்கரமான விஷயம் ஏன் நடக்கிறது?” ஏன்? ஏன்? ஏன்?*

*“ஏன்?” என்ற கேள்வியுடன் நாம் போராடுகையில், ஏசாயா 55:8, 9ஐ நம் சிந்தையில் காத்துக்கொள்ள வேண்டும்:*

> *“என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது.”*

*தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகளாக இருப்பதில்லை. கற்றுக்கொள்வதற்கு அது நமக்கு ஒரு முக்கியமான சத்தியமாக உள்ளது.*

*நாம், இந்த சத்தியத்தைத் தொலைவில் இருக்கும்படி பற்றிக்கொண்டிருக்கும் வரையிலும், நமக்கு அல்ல ஆனால் மற்றவர்களுக்கு இது நடைமுறைப்படும் வரையிலும் இதை வழுவின்றி பற்றிக்கொண்டு இருக்கிறோம். எடுத்துக்காட்டாக, உபதேச விஷயங்களைப் பற்றி நாம் பேசிக்கொண்டிருந்து, யாரேனும் ஒருவர் "அது எனக்கு எந்தக் கருத்தையும் ஏற்படுத்துவதில்லை" என்று கூறினால், நாம் உடனடியாக "தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகளாக இருப்ப தில்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்" என்று கூறுகிறோம். அவிசுவாசமுள்ள ஒரு நண்பர், வாழ்வின் சமநிலையற்ற தன்மைகளைப் பற்றி விளக்கியுரைக்கும்படி நம்மிடத்தில் கேட்டுக்கொண்டால் நாம், "தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகளாக இருப்பதில்லை" என்று மேலெழுந்தவாரியாகக் கூறுகிறோம்.*

*இருப்பினும், நாம் திட்டமிட்டபடி நமது வாழ்வு அமையாதபோது, நமது விசுவாசம் முறிந்து போகும் அளவுக்கு நீட்டப்படும்போது, நம்மால் முடிந்த அளவு மிகச்சிறப்பாக நாம் செயல்பட்டும் ஒவ்வொரு விஷயமும் தவறாகப் போவதாகக் காணப்படுகிறபோது, அன்பான ஒருவரை நாம் இழந்து இருக்கிறபோது, நாம் "ஏன்?" என்று கதறுகிறோம். பொதுவாக, யாரேனும் ஒருவர் "அதை நியாயப்படுத்த வழியெதுவும் இல்லை. தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகளாக இருப்பதில்லை. சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்பதை மாத்திரம் விசுவாசியுங்கள்" என்று கூறுவதைக் கேட்பதில் சிறிதளவே ஆறுதல் உள்ளது. விஷயங்கள் கைக்கு நெருக்கமாக இருக்கும்போது, இந்த சத்தி யத்தைக் கண்ணோக்குதல் மிகவும் கடினமாக உள்ளது.*

*இந்தப் படிப்பில் நாம் ஒவ்வொரு பிரச்சனையையும் தீர்த்து வைக்க மாட்டோம், ஆனால் 1 இராஜாக்கள் 17:1-15 வசனப்பகுதியானது, நம் யாவருக்கும் கற்றுக்கொள்வதற்கான பாடங்களைக் கொண்டுள்ளது. தண்ணீரை வற்றிபோகச் செய்தது யார் - மற்றும் ஏன்?*

## தேவன் இஸ்ரவேலில் தண்ணீரை வற்றிப்போகச் செய்தது ஏன்? (17:1)

*நமது வேதபாட வசனப்பகுதியில் முதல் பாகத்தில் (1 இராஜாக்கள் 17:1), நாம் பின்வரும் கேள்வியை கேட்போமாக: "தேவன் இஸ்ரவேலில் தண்ணீரை வற்றிபோகச் செய்தது ஏன்?"*

*இந்தக் கேள்விக்குப் பதில் அளிப்பதற்கு நாம், இஸ்ரவேலில் நடந்தது என்ன என்பதை மறுகண்ணோட்டமிடுவது அவசியமாக உள்ளது. உபாகமம் 7:1-6ல் மோசே தேவனுடைய மக்களைப் பின்வருமாறு எச்சரித்திருந்தார்:*

> *"நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைப் பிரவேசிக்கப்பண்ணி, ... ஜாதிகளை உனக்கு முன்பாகத் துரத்தி, உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது, அவர்களை முறிய அடித்து, அவர்களைச் சங்காரம் பண்ணக்கடவாய்; அவர்களோடே உடன்படிக்கை பண்ணவும் அவர்களுக்கு இரங்கவும்*

*வேண்டாம். அவர்களோடே சம்பந்தம் கலவாயாக; உன் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளை உன் குமாரருக்குக் கொள்ளாமலும் இருப்பாயாக. என்னைப் பின்பற்றாமல், அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி அவர்கள் உன் குமாரரை விலகப்பண்ணுவார்கள்; அப்பொழுது கர்த்தருடைய கோபம் உங்கள்மேல் மூண்டு, உங்களைச் சீக்கிரத்தில் அழிக்கும் ...*

"நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார்.'' (என்னால் வலியுறுத்தப்படுகிறது.)

இருப்பினும் இஸ்ரவேல் தேவனுடைய எச்சரிக்கையை ஜாக்கிரதையாகக் கவனிக்கவில்லை. ஆகாப் அரியணையின் மீது இருந்தார் மற்றும் அவர் அருகில் யேசபேல் இருந்தாள், அவள் இஸ்ரவேலில் பாகாலியத்தை அறிமுகப்படுத்திய பெனிக்கிய நாட்டு அரசியாக, யெகோவாவின் மேடைகளைத் தகர்த்து அவரது தீர்க்கதரிசிகளைக் கொன்றவளாக இருந்தாள். இஸ்ரவேல் நினைவுக்கு உரிய விகிதத்தில் ஆவிக்குரிய பேரழிவை எதிர்கொண்டிருந்தது. சில விஷயங்கள் செய்யப்பட வேண்டியதாக இருந்தன.

நாம், ''கர்த்தாவே நீர் என்ன செய்வீர்? இஸ்ரவேலைத் துடைத்துப்போடும்படிக்கு நீர் வானத்தில் இருந்து அக்கினியை அனுப்புவீரா?" என்று கேட்கிறோம்.

தேவன், "இப்போது இல்லை" என்று பதில் அளிக்கிறார்.

"நாடு முழுவதையும் துடைத்துப் போடும்படிக்கு வல்லமைநிறைந்த ஒரு படையை அனுப்புதல் பற்றிய விஷயம் என்ன?"

"இப்போது இல்லை."

"பாகாலியத்தை எதிர்த்து முன்னோக்கிச் செல்வதற்கு, விசுவாசம் நிறைந்த பிரசங்கியார்கள், தீர்க்கதரிசிகள் மற்றும் ஆசாரியர்கள் அடங்கிய வல்லமையான ஒரு கூட்டம்பற்றிய விஷயம் என்ன?"

"இப்போது இல்லை."

"அரசரின் மதிப்பை ஆதாயப்படுத்தி - அவரை உம்மிடத்தில் திரும்பக் கொண்டுவர - பண்புமிக்க ஒரு பட்டச்சான்றிதழ் பெற்றவரைப் பற்றிய விஷயம் என்ன?"

''இல்லை. எலியாவே என் மனிதராக இருக்கிறார்'' என்று தேவன் கூறுகிறார்.

"எலியாவா? நான் அவரைப்பற்றி ஒருக்காலும் கேள்விப்பட்டதில்லையே. அவரைக் கண்ணோக்குவோம். அங்கு இருக்கிற நயப்பாங்கற்றவராகக் காணப்படுகிற நபரை நீங்கள் குறிப்பிடவில்லை என்பது நிச்சயம்தானே? அவர் பல மாதங்களாக முகச்சவரம் செய்யாதவராக அல்லது முடிவெட்டிக்கொள்ளாதவராக இருப்பதுபோலக் காணப்படுகிறார் - மற்றும் அவர் அதே அளவு நீண்ட காலம் குளிக்காதவர் போலவும் இருக்கிறார்! அவரது குரலும் அவரது பேச்சும் தகரத்தினால் கீறுவது போல உள்ளது. அவர் ஏன் கர்த்தாவே, அவர் ஏன்?"

தேவன், "எனது நினைவுகள் உங்கள் நினைவுகளாக இருப்பதில்லை, மற்றும்

எனது வழிகள் உங்கள் வழிகளாக இருப்பதில்லை. *இவரே* இஸ்ரவேலில் எனது மனிதர்'' என்று பதில் அளிக்கிறார்.

அந்தக் காட்சியானது, இந்தப் பாடத்தில் நாம் படிக்கும் வசனப்பகுதிக்குத் தொனியை அமைக்கிறது. தேவன் இஸ்ரவேலில் இருந்த ஆவிக்குரிய பிரச்சனையைக் கையாளுவார், ஆனால் அவர் அதைத் தமது வழியில், தமது காலத்தில், தமது திட்டத்தின்படி கையாளுவார்.

சென்ற முறை நாம் நிறுத்தியிருந்த இடத்தில் இருந்து நாம் தொடங்குவோமாக; எலியா ஆகாப் முன்னால் வந்திருந்தார். ஆகாபிடத்தில் எலியா பின்வருமாறு கூறினார்: "என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்'' (1 இராஜாக்கள் 17:1).

பலநாட்கள் தண்ணீர் இன்றி இருத்தல் என்பது வசதியற்றதாக இருக்கும். பல வாரங்கள் தண்ணீர் இன்றி இருத்தல் என்பது ஒரு தொந்தரவாக இருக்கும். பல மாதங்கள் தண்ணீர் இன்றி இருத்தல் என்பது கடுமையானதாக இருக்கும். ஆனால் பல வருடங்கள் தண்ணீர் இன்றி இருத்தல் என்பது பெருந்துன்பமாக இருக்கும்! அப்போது மரணம் என்பது தவிர்க்க இயலாததாகும்; தண்ணீர் இன்றி உயிர்வாழ்வு இருக்க இயலாது. இருப்பினும் "வருஷங்கள்'' என்பதாக உள்ளது. இந்தப் பஞ்சம் *மூன்றரை ஆண்டுகள்* நீடித்திருந்ததாகப் புதிய ஏற்பாட்டில் இருமுறை குறிப்பிடப்பட்டுள்ளது (லூக்கா 4:25; யாக்கோபு 5:17).

ஒரு வறட்சி வரவேண்டும் என்று தேவன் ஆணையிட்டது ஏன்? அதற்குப் பதில் அளிப்பதற்கு நாம், முதலில் வேதாகமத்தின் முற்பகுதிக்குச் செல்வோமாக. உபாகமம் 7ம் அதிகாரத்தில், விக்கிரக ஆராதனைக்குள் செல்ல வேண்டாம் என்பது பற்றித் தேவனுடைய எச்சரிக்கையைக் கண்டோம். இப்போது அதே புத்தகத்தின் 11ம் அதிகாரத்தில் உள்ள தொடர் எச்சரிக்கை ஒன்றைக் கவனியுங்கள்:

> "உங்கள் இருதயம் வஞ்சிக்கப்படாமலும், நீங்கள் வழிவிலகி அந்நிய தேவர்களைச் சேவித்து அவர்களை நமஸ்கரியாமலும் இருக்கும்படி எச்சரிக்கையாயிருங்கள். இல்லாவிடில் கர்த்தருடைய கோபம் உங்கள்மேல் மூண்டு, மழை பெய்யாமற்போகவும், *தேசம் தன் பலனைக் கொடாமலிருக்கவும் வானத்தை அடைத்துப்போடுவார்*; கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த நல்ல தேசத்திலிருந்து நீங்கள் சீக்கிரத்தில் அழிந்துபோவீர்கள்'' (வசனங்கள் 16, 17; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

மனிதர்கள் அடிக்கடி, தங்கள் செயல்பாடுகளின் விளைவுகளினால் துன்புறுகின்றனர் என்பது வாழ்வின் உண்மையாக உள்ளது. "நீங்கள் அதை உங்கள்மீது கொண்டுவந்தீர்கள்'' என்ற சொல் விளக்கத்தை நாம் யாவரும் கேள்விப்பட்டிருக்கிறோம். அடிக்கடி - எப்போதும் இல்லை என்றாலும் அடிக்கடி - நமது இடர்ப்பாடுகளுக்கு நாம் நம்மைத் தவிரப் பழிபோட வேறு எவரையும் கொண்டிருப்பதில்லை.

இப்போது நாம், புதிரின் இன்னொரு துணுக்கைப் பொருத்தியமைப்பதற்கு, வேதாகமத்தின் முடிவுப்பகுதிக்கு அண்மையில் செல்வோ

*மாக. யாக்கோபு கிறிஸ்தவர்களுக்கு எழுதிய நிருபத்தில், இந்த வரலாற்றைப் பற்றி நாம் வேறு எவ்விடத்திலும் காண இயலாத ஒரு விபரத்தைக் கூடுதலாகத் தருகிறார்: "எலியா என்பவன் நம்மைப்போலப்பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை" (யாக்கோபு 5:17; என்னால் வலியுறுத்தப்படுகிறது).*

*அந்தப் பஞ்சம் என்பது ஜெபத்திற்குப் பதில் என்ற வகையில் வந்தது, அது உபாகமம் 11:16, 17ல் தேவன், தாம் என்ன செய்வதாக இருந்தார் என்று அவர் அச்சுறுத்திய ஜெபமாக இருந்தது. இது ஜெபத்தின் வல்லமை பற்றிய மாபெரும் உதாரணமாக உள்ளது! ஒரு முழு தேசத்தின் பொருளாதாரமும் மூன்றரை ஆண்டுகள் காலத்திற்குத் தகர்த்துப்போடப்பட்டது!*

*நமது கேள்விக்கு நாம் திரும்புவோமாக. தேவன் இஸ்ரவேலில் தண்ணீரை ஏன் வற்றிப்போகச் செய்தார் என்று நாம் அவரைக் கேட்பதாக இருந்தால், அவர் பின்வருமாறு பதில் அளிக்கலாம்: (1) "ஏனென்றால் மக்கள் எனது குரலுக்குக் கீழ்ப்படியாமல் போனார்கள் எனவே தண்டனைக்குப் பாத்திரர் ஆனார்கள்"; (2) "ஏனென்றால் எனது விசுவாசம் நிறைந்த ஊழியக்காரரான எலியா ஊக்கமாக ஜெபித்தார், மற்றும் நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாக இருக்கிறது"; அல்லது (3) "நானே தேவன் என்று காண்பிக்கவும், எனது மக்கள் மனந்திரும்பி என்னிடம் திரும்பவும், அவர்களின் தவறான வழிகளை அவர்களுக்குக் காண்பிக்கவும்!"*

*நீங்களும் நானும் ஒருக்காலும் தேவனுடைய வழிகளை முழுமையாகப் புரிந்துகொள்ள இயலாது, ஆனால் அவற்றைப் பற்றிச் சிந்தித்தலும் ஆழ்ந்து சிந்தித்தலுமேகூட திகைப்பினால் நிரப்பப்படுவதாக இருக்கிறது. பின்வருவதைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்: மூன்றரை ஆண்டுகள் காலத்திற்கு தண்ணீரை வற்றிப்போகச் செய்தல் என்ற எளிய, சூழ்நிலைக்கு ஏற்ற விஷயத்தைக் காட்டிலும் வேறு எந்த வகையில் தேவன் முழு தேசத்தின் கவனத்தை அவ்வளவு செயல்வலிவாக ஈர்த்திருக்க முடியும்?*

## கேரீத் ஆற்றின் தண்ணீரைத் தேவன் வற்றிப்போகச் செய்தது ஏன்? (17:2-7)

*நாம், "பின்பு கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று" என்று வாசிக்கிறோம் (வசனம் 2). ஒரு வேளையில் ஒரு அடிவைப்பை மாத்திரம் செய்யும்படி எலியாவுக்குக் கூறப்பட்டது. அவர் ஆகாப் முன்பாக நின்று தேவனுடைய செய்தியைக் கூறியபோது, அடுத்து என்ன செய்வது என்பதை அறியாது இருந்தார். "பின்பு கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று." அவர் கேரீத் ஆற்றண்டைக்குச் சென்று அங்கே ஏறக்குறைய ஓராண்டுகாலம் இருந்தார். அந்தக் காலகட்டத்தின் முடிவில் கர்த்தருடைய வார்த்தை அவருக்கு உண்டாயிற்று (வசனம் 8), மற்றும் அவர் சாறிபாத் ஊருக்குச் சென்றார். மூன்றரை ஆண்டுகள் கால முடிவில், "அநேகநாள் சென்று, மூன்றாம் வருஷமாகையில், கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு உண்டாகி"; என்று நாம் மீண்டும் வாசிக்கிறோம் (1 இராஜாக்கள் 18:1).*

*அந்த அடிப்படையில் இயங்குவதை நான் விரும்புவதில்லை, நீங்கள்*

*விரும்புகிறீர்களா? நான் திட்டமிட விரும்புகிறேன். செய்யவேண்டியவற்றை முன்கூட்டியே திட்டமிட்டு வைப்பதை நான் விரும்புகிறேன். என்னால் இயன்றவரையிலும் சிறப்பாக, தொடக்கத்திலிருந்தே முடிவைக் காண நான் விரும்புகிறேன். இருப்பினும் வாழ்வில் விஷயங்கள் எப்போதுமே அதைப்போன்று இருக்க முடியாது. சிலவேளைகளில் ஒரு நாளுக்கு ஒன்று, ஒரு வேளைக்கு ஒரு அடிவைப்பு என்றிருக்கிறது.*

*எலியா தேவனால் பயன்படுத்தப்படக் கூடிய மனிதராக இருந்தார், ஏனென்றால் அவர் எல்லாவற்றையும் அறிந்துகொள்ளவும் புரிந்துகொள்ளவும் விரும்பாதிருந்தார். அவரால், ஒரு வேளைக்கு ஒரு அடிவைப்பை எடுத்துவைக்க முடிந்தது. ("கர்த்தாவே நீர் விரும்புகிற வழி அதுவானால், அது எனக்கும் சரியே.")*

*2ம் வசனத்திற்குத் திரும்பும் நாம், இரண்டாவது அடிவைப்புக்குத் தயாராகிறோம்.*

*இரண்டாவது அடிவைப்புப் பற்றி நீங்கள் யூகிப்பது என்ன? எலியாவின் சூழ்நிலையில் இருப்பதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். நாம் அரசருக்கு அறிவிப்பை ஏற்படுத்திவிட்டோம். இப்போது என்ன? தேசிய தொலைக்காட்சியில் செய்தித்துறையைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு மாநாடு நடத்துதல்? சுவரொட்டிகளை ஒட்டுதல்? முன்னணிச் செய்தித்தாள்கள் மற்றும் சஞ்சிகைகளில் பெரிய அறிவிப்பை இடுதல்? அல்லது கிறிஸ்துவுக்கு முந்திய காலத்திற்குச் சமமானதைச் செய்தல்: தெருக்கள் மற்றும் கிராமங்களில் சென்று தேவனுடைய செய்தியை அறிவித்தல்? (அவர் அழிவு மற்றும் இருள் பற்றிய தமது மிகச்சிறந்த செய்தியைத் தயாரித்து இருக்க முடியும் மற்றும் யோனா நினிவே நகரத்தில் பிற்பாடு செய்ததைச் செய்திருக்கவும் முடியும்: தெருக்களில் சென்று "மனந்திரும்புங்கள்!" என்று சத்தம் இடுதல்.) இது நியாயமானதாகக் காணப்பட்டிருக்கும். இருப்பினும் மீண்டும் தேவன், "என்னுடைய வழிகள் உங்களுடைய வழிகள் அல்ல" என்று கூறுகிறார்.*

*இரண்டாவது அடிவைப்பு என்னவாக உள்ளது? 3 மற்றும் 4வது வசனங்களைக் கவனியுங்கள்:*

> *"நீ இவ்விடத்தை விட்டுக் கீழ்த்திசையை நோக்கிப் போய், யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையில் ஒளித்துக்கொண்டிரு. அந்த ஆற்றின் தண்ணீரைக் குடிப்பாய்; அங்கே உன்னைப் போஷிக்க, காகங்களுக்குக் கட்டளையிடுவேன்."[1]*

*நான் எலியாவாக இருந்திருந்தால், தேவன் என்னிடத்தில் "நீ சற்று நேரம் உனது வழியில் இருந்து வெளியே வந்து விஷயங்கள் தங்கள் இயல்பான ஓட்டத்தை எடுத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். கொஞ்சக்காலம் உன்னை ஒளித்து வைக்கப்போகிறேன்" என்று கூறியிருந்தால், நான் எவ்வாறு மறுசெயல் செய்திருப்பேன் என்று கற்பனை செய்ய முடிகிறது.*

*நான், "ஓ, எங்கே? ஒரு இல்லம்? ஒரு கூடாரம்? எங்கே?" என்று பதில் அளித்திருப்பேன்.*

*"ஒரு ஆற்றங்கரை என்பதையே நான் மனதில் கொண்டுள்ளேன்."*

*"ஒரு ஆற்றங்கரை? ... என்னால் அதைக் கையாள முடியும். முன்னதாக நான்*

*அதைத் தோராயமாகத் திட்டமிட வேண்டும்."*

*"நீ அந்த ஆற்றில் இருந்து தண்ணீரைப் பெற்றுக்கொள்வாய்."*

*"அது சரியானதாகவே ஒலிக்கிறது. உணவைப் பற்றிய விஷயம் என்ன? நான் நிலத்திலிருந்து கிடைப்பதில் வாழ வேண்டுமா?"*

*"இல்லை, உணவளிப்பவர் ஒருவரை நீ பெற்றிருப்பாய்."*

*"உணவளிப்பவர்? சமாரியாவின் ஹியாட் - ஹில்ட்டனா?"[2]*

*"இல்லை, காகங்கள். காகங்கள் தினமும் காலையிலும் மாலையிலும் வரும், அவைகள் உனக்கு அப்பமும் இறைச்சியும் கொண்டுவரும்."*

*"காகங்கள்? அசுத்தமான காகங்கள்? மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் அசுத்தமானவையாக உள்ள அந்தப் பறவைகளா? அவைகள் தங்களின் அருவருப்பான அலகுகளில் அல்லது தங்களின் அழுக்கான கால்களில் எனது உணவைக் கொண்டுவரப்போகின்றனவா?"*

*"அது சரியே!" என்று தேவன் கூறினார்.*

*நீங்களும் நானும் இஸ்ரவேலில் நமது மனிதனை இந்தவிதமாகவா பராமரிப்போம்? அனேகமாக இருக்காது - ஆனால் தேவனுடைய வழிகள் நமது வழிகளாக இருப்பதில்லை.*

*மற்ற ஒவ்வொருவரையும் போலவே, இஸ்ரவேலில் தேவனுடைய மனிதனுக்கும் பாதுகாப்பும் உணவுப்பொருட்களும் தேவைப்பட்டன. அந்தப் பாதுகாப்பையும் உணவையும் தேவன் கொடுத்தார், ஆனால் அதை அவர், எவ்வாறு கொடுக்கவேண்டும் என்று மனிதன் நினைக்கிறானோ அவ்வாறு கொடுக்கவேண்டிய அவசியமில்லை. நீங்கள் தேவனுடைய உண்மை நிறைந்த பிள்ளையாக இருந்தால், தேவன் உங்களுக்குப் பாதுகாப்பையும் அளிப்புகளையும் அருளிரக்கத்துடன் தருகிறார், ஆனால் அந்த ஆசீர்வாதங்கள் குறிப்பிடத்தக்கதல்லாத நீரோடைகள் மற்றும் அழுக்கான பறவைகள் என்ற முகமூடியிட்டு வரலாம்.*

*இப்போது 5ம் வசனத்தின் முதல் பகுதியைக் கவனியுங்கள்: "அவன் போய், கர்த்தருடைய வார்த்தையின்படியே [செய்தார்]." அது அழகானதாக இருப்பதில்லையா? தேவன் பேசியபோது, அவர் கூறியவாறே எலியா செய்தார். இந்தப் பாடம் இன்றைய நாட்களின் உலகத்திற்கு எவ்வளவாகத் தேவைப்படுகிறது! தேவன் பேசுகிறபோது, அவரது அறிவுறுத்தல் நிறைவானதாக உள்ளது. அது எனக்குக் கருத்தறிவை ஏற்படுத்தலாம் அல்லது அது எனக்குக் கருத்தறிவை ஏற்படுத்தாமல் போகலாம், ஆனால் அது முக்கியமற்றதாக உள்ளது. தேவன் அதைக் கூறியிருக்கிறார் என்பதே முக்கியமான விஷயமாக உள்ளது. அது எனக்குப் போதிய அளவு நல்லதாக உள்ளது; அதை நான் செய்வேன்!*

> *அவன் போய், கர்த்தருடைய வார்த்தையின்படியே யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையில் தங்கியிருந்தான். காகங்கள் அவனுக்கு விடியற்காலத்தில் அப்பமும் இறைச்சியும், சாயங்காலத்தில் அப்பமும் இறைச்சியும் கொண்டுவந்தது, தாகத்திற்கு அந்த ஆற்றின் தண்ணீரைக் குடித்தான் (வசனங்கள்5, 6).*

*கேரீத் ஆறு, எலியா வளர்ந்த பொதுவான பகுதியான, "யோர்தானுக்குக் கிழக்கில்"[3] [இது தமிழில் "நேராயிருக்கிற" என்றுள்ளது] இருந்தது என்பதைத்*

தவிர நாம் இந்த ஆற்றைப் பற்றி வேறு ஒன்றும் அறிவதில்லை.

அந்த இடத்தை உங்கள் சிந்தையில் காண்பதற்குச் சற்று நேரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அது அனேகமாகப் புறம்பே சற்றுக்குறுகிய தொலைவில் இருந்துகூடக் காண முடியாத ஒரு கணவாயாக, அதினூடே ஓடும் ஆற்றைக் கொண்டதாக இருந்திருக்கலாம். அந்த ஆற்றின் இருகரைகளிலும் பச்சைப் புற்களும், அனேகமாக ஒரு சில புதர்களும் குறுகிய வளர்ச்சி கொண்ட மரங்களும் இருந்திருக்கலாம். மேலும் அந்த ஆற்றின் கரையருகில் சிறு மிருகங்களின் காலடித்தடங்கள் நிச்சயமாக இருந்திருக்கலாம்.

எலியா கேரீத் ஆற்றண்டைக்குச் சென்று அங்கே வாழ்ந்தார் என்று வசனப்பகுதி கூறுகிறது. அவர் நீடித்துத் தங்கும்படி அங்கே குடியமர்ந்தார். இது பல மாதங்களுக்கு அவரது இல்லமாக இருந்தது.

"கேரீத்" என்பது "துண்டிக்கப்பட்டிருத்தல்" "பிரிந்திருத்தல்" என்று அர்த்தப்படுகிறது. அது நாம் படிக்கும் இந்த வரலாற்றிற்குப் பொருத்த மானதாக உள்ளது, ஏனெனில் எலியா - கடுமையான கோடைகாலம், குளிரான பனிக்காலம், உறையவைக்கும் குளிர்காலம், அகமகிழ்வூட்டும் வசந்தகாலம் என்ற - பல நாட்களாக, மற்ற எல்லாரிடத்திலும் இருந்து பிரிக்கப்பட்டு, துண்டிக்கப்பட்டு இருந்தார், கணவாயின் இருபக்கங்களும் அவரது அறையின் இரு சுவர்களாகவும், ஆகாயம் அவரது மேற்கூரையாகவும், புல்வெளி அவரது படுக்கையாகவும், அவரது மேல் அங்கி அவரது போர்வையாகவும் இருந்தன.

எலியா அங்கு எவ்வளவு நாட்கள் இருந்தார் என்று நாம் உறுதியாக அறிவதில்லை. மொத்தத்தில் அவர் மூன்றரை ஆண்டுகள் காலம் மறைந்தி ருந்தார். அவர் சாறிபாத் ஊரில் இரண்டு ஆண்டுகளுக்கு அதிகமாக இருந்தார் என்பதற்குச் சில குறிப்புகளை நாம் 1 இராஜாக்கள் 18:1ல் பெறலாம். விஷயம் அப்படியிருந்ததென்றால், அவர் கேரீத் ஆற்றண்டையில் ஒரு ஆண்டுக்கும் சற்று அதிகமான காலம் இருந்தார் என்றாகிறது.

சற்றே நின்று, அதைப்பற்றி நினைத்துப் பாருங்கள். இங்கு செயல்பாட்டின் மனிதர் ஒருவர், ஒரு ஆண்டுக்கும் மேற்பட்ட காலத்திற்குச் செயலற்று இருக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டார். அது கடினமாக இருக்கும் என்று நீங்கள் அறிவதில்லையா? அது நமக்குக் கடினமாக இருக்கிறது. ஓரிரு ஆண்டுகள் வேலை செய்யாது இருப்பதை நாம் விரும்புவதாகக் கூறுகிறோம், ஆனால் செய்வதற்கு ஒன்றுமில்லாது ஒரு சிலநாட்களை நாம் கொண்டிருக்கும்போது, நாம் கிளர்ச்சியடைந்து, சுணக்கமாகி, வேலை செய்யத் திரும்புவதற்குத் தயாராகிறோம். நாம் ஓரிரு மாதங்கள் படுக்கையில் செலவழிக்க விரும்புவதாகக் கூறலாம், ஆனால் சுகவீனத்தினால் ஒருசில நாட்கள் நாம் படுக்கையில் இருக்கும்படிக் கட்டாயப்படுத்தப்படும்போது, நாம் அதிலிருந்து எழுந்தி ருக்கவே விரும்புவோம். நாம் "செயல்படுகிற" மக்களாக இருக்கிறோம்; கட்டாயப்படுத்தப்பட்ட செயல்விளைவற்ற நிலையை நாம் வெறுக்கிறோம். இருப்பினும் சிலவேளைகளில், சுகவீனத்தினால், ஓய்வினால் அல்லது வேலை மாற்றத்தினால் அது நம்மீது வலிந்து திணிக்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலைகள் சிரமமானவைகளாக உள்ளன, ஆனால் தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகளாக இருப்பதில்லை. தேவனுடைய அளிப்புகள் நம்முடைய அளிப்புகளாக இருப்பதில்லை. தேவனுடைய கால அட்டவணைகள் நம்முடைய கால அட்டவணைகளாக இருப்பதில்லை.

*சில வேளைகளில் நாம் ஆற்றண்டையில் - பிரிக்கப்பட்டு, துண்டிக்கப்பட்டு, ஒருவேளை செயலற்றுக்கூட - இருத்தல் என்பது அவரது சித்தமாக இருக்கலாம். அது சுலபமானதாக இருப்பதில்லை; ஆனால் அது தேவனுடைய சித்த மாக இருந்தால், அது நமது நன்மைக்கானதாகவே உள்ளது. நாம் அதை ஏற்றுக்கொண்டு, இளைப்பாறி மற்றும் அந்த அனுபவத்தில் இருந்து கற்றுக் கொள்ளுதல்கூட அவசியமானதாக உள்ளது.*

*கேரீத் ஆற்றண்டையில் அந்த மாதங்களைப் பற்றி அதிகமாக அறிய நான் விரும்புகிறேன். கேரீத் ஆற்றண்டையில் இருந்த அந்த நாட்களில், வாரங்களில் எலியா, தேவனிடத்தில் ஜெபிக்கையில் மற்றும் அவரைப் பற்றிச் சிந்திக்கையில், ஆவிக்குரிய வகையில் வளர்ந்தார் என்பது எனது யூகமாக உள்ளது. இருப்பினும் அந்த விபரங்களை வேதாகமம் தருவதில்லை. எலியா தேவனுடைய பிரசன்னத்தில் இருந்தார் (வசனம் 1) மற்றும் தமக்குத் தேவன் கூறியதைச் செய்தார் (வசனம் 5) என்று மாத்திரமே அது கூறுகிறது.*

*இப்போது, இவ்வரலாற்றின் வினோதமான பாகத்திற்கு நாம் வருகிறோம். அங்கு எலியா, தாம் செய்யும்படி தேவன் கூறியதைச் செய்துகொண்டிருந்தார், தாம் இருக்கும்படி தேவன் கூறிய இடத்தில் இருந்தார் ...* மற்றும் தண்ணீர் வற்றிப்போயிற்று: *"தேசத்தில் மழை பெய்யாதபடியினால், சிலநாளுக்குப்பின்பு அந்த ஆறு வற்றிப்போயிற்று" (வசனம் 7).*

*சித்தரிப்பை நீங்கள் பெறுகிறீர்களா? ஆறுகள் ஒரே இரவில் உலர்ந்து போவதில்லை. அதற்குப் பலநாட்கள், ஒருவேளை பலவாரங்கள்கூட ஆகலாம். ஒரு நாள் எலியா ஆற்றில் தண்ணீர் அருந்துகையில் ஏதோ சிலவிஷயம் தவறாகி இருப்பதாக மனப்பதிவை அவர் பெற்றிருக்கலாம், ஆனால் உண்மையில் அது என்னவாக இருந்தது என்று அறியாதிருக்கலாம். அடுத்தநாளில் அவர், "ஒருவேளை அது எனது கற்பனையாக இருக்கலாம், ஆனால் ஆறு போதிய அளவு ஆழமில்லை, போதிய அளவு வேகமில்லை" என்று நினைத்தி ருக்கலாம். அடுத்தநாளில் அவர், "அது எனது கற்பனை*யல்ல*. இந்த ஆறு வற்றிப்போய்க்கொண்டுள்ளது!" என்று உணர்ந்து அறிந்தார்.*

*அந்த ஆறு நாளுக்கு நாள் சிறிதாவதையும், சேறுநிறைந்த அழுக்கான ஆறாவதையும், சிறு பறவைகளும் மிருகங்களும் அதைவிட்டுச் சென்றதையும் ஆழமற்ற குட்டைகளில் சிறு மீன்கள் துள்ளி இறப்பதையும், கடைசியில் உலர்ந்த ஆற்றுப்படுகையில் தேக்கமடைந்த ஒருசிறு துளிகள் மாத்திரம் இங்குமங்கும் எஞ்சியிருப்பதையும் கண்டார்.*

*இந்த வேளை யாவற்றிலும், அடுத்த என்ன செய்வது என்பதை எலியா அறியாதிருந்தார்! அதை உங்கள் மனதில் அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள். ஆறு உலர்ந்து போகும் வரையிலும் மூன்றாவது படி என்ன என்பது வெளிப்படுத்தப்படவில்லை. 8ம் வசனத்தைக் கவனியுங்கள்: "அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று."*

*இது விசுவாசத்திற்கான என்ன ஒரு பரீட்சையாக உள்ளது! "தனித்து நிற்குதல்" என்பது எலியாவுக்கு முதல் பரீட்சையாக இருந்தது. அது கடினமா னதாக இருந்தது. "கருத்தறிவு எதையும் ஏற்படுத்தாத நிலையில், கேள்வியின்றி கீழ்ப்படிதல்" என்பது அவருக்கு இரண்டாவது பரீட்சையாக இருந்தது. அது மிகவும் கடினமானதாக இருந்தது.இருப்பினும் அவருக்கான மூன்றாவது பரீட்சை, எல்லாவற்றிலும் மிகமிகக் கடினமானதாக இருந்தது: அவர்*

*இருக்கும்படி தேவன் விரும்பிய இடத்தில் அவர் இருந்தார், மற்றும் தேவன் விரும்பியதை அவர் தம்மால் முடிந்த அளவுக்கு மிகச்சிறப்பாகச் செய்தார் - மற்றும் அவரது ஆறு வற்றிப்போயிற்று!*

நீங்கள் அங்கிருந்திருக்கிறீர்கள். நீங்கள் அதைக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் அறிகிறேன். ஒருவேளையில் நீங்கள் முழு வங்கி [கரை] கணக்கைக் கொண்டிருந்தீர்கள் - ஆனால் பின்பு உங்கள் ஆறு வற்றிப்போயிற்று. ஒருவேளையில் நீங்கள் நல்லதொரு வணிகத்தைக் கொண்டிருந்தீர்கள் - ஆனால் பின்பு உங்கள் ஆறு வற்றிப்போயிற்று. ஒருவேளையில் நீங்கள் நல்ல உடல்நலத்தை, ஆரோக்கியமான ஒரு உடலை, நல்லதொரு சிந்தையைக் கொண்டிருந்தீர்கள் - ஆனால் உங்கள் ஆறு வற்றிப்போயிற்று. ஒருவேளையில் நீங்கள் கர்த்தருக்கென்று பயன்படுத்தக் கூடிய தாலந்துகளைக் கொண்டிருந்தீர்கள் மற்றும் அவருடைய ஊழியத்தில் சந்தோஷமாகவும் சுறுசுறுப்பாகவும் இருந்தீர்கள் - ஆனால் உங்கள் ஆறு வற்றிப்போயிற்று. ஒருவேளையில் நீங்கள் பல நண்பர்களைக் கொண்டிருந்தீர்கள் ஆனால் அவர்கள் உங்களை விட்டு அகலவேண்டியதாயிற்று அல்லது மரித்துப்போனார்கள் அல்லது நீங்கள் வேரிடத்திற்கு மாறிப்போக வேண்டியதாயிற்று - உங்கள் ஆறு வற்றிப்போயிற்று. ஒருகாலத்தில் நீங்கள் நல்ல தொரு திருமணத்தைக் கொண்டிருந்ததாக நினைத்தீர்கள் - ஆனால் உங்கள் ஆறு வற்றிப்போயிற்று. நீங்கள் உங்களால் முடிந்த அளவுக்கு மிகச்சிறப்பாக உங்கள் பிள்ளைகளைக் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தில் வளர்த்தீர்கள் மற்றும் நீங்கள் நல்லதொரு பணியைச் செய்ததாக நினைத்தீர்கள் - ஆனால் பின்பு உங்கள் ஆறு வற்றிப்போயிற்று.

எலியா இதைச் செய்யவில்லை, ஆனால் அவர், "கர்த்தாவே கேரீத் ஆற்றை நீர் வற்றிப்போகச் செய்தது ஏன்?" என்று கதறியதாக நாம் கற்பனை செய்துகொள்வோம். கர்த்தருடைய முதல் பதிலானது திகைப்புக்குரிய வகையில் பின்வருமாறு இருந்திருக்கும்: "எலியாவே, நீ ஜெபித்த காரணத்தினால் நான் இதைச் செய்தேன்." வசனப் பகுதியைக் கவனியுங்கள்: "*தேசத்தில் மழை பெய்யாதபடியினால்*, சிலநாளுக்குப்பின்பு அந்த ஆறு வற்றிப்போயிற்று." தேசத்தில் ஏன் மழைபெய்யாதிருந்தது? ஏனென்றால் எலியா அதற்காக ஜெபித்தார் (யாக்கோபு 5:17).

எப்போதுமில்லாவிட்டாலும், சிலவேளைகளில் தேவன் நாம் எதிர்பாராத வழிகளில் நமது ஜெபங்களுக்குப் பதில் அளிக்கிறார் என்பதால் விஷயங்கள் நமக்கும் இவ்வாறு நடைபெறுகின்றன. நாம், "தேவனே, எனக்குப் பொறுமையைத் தாரும், ஆனால் நீண்டகாலம் எடுத்துக்கொள்ளாதிரும்" என்று ஜெபிக்கிறோம். அல்லது: "எனக்கு விசுவாசத்தைத் தாரும், ஆனால் என்னை வேதாகமத்தைப் படிக்கும்படி செய்யாதிரும்" என்று ஜெபிக்கிறோம். அல்லது: "எனக்குப் பலத்தைத் தாரும் ஆனால் என்னைத் துன்புற விடாதிரும்" என்று ஜெபிக்கிறோம். நாம் திட்ட மிட்டபடியே விஷயங்கள் எப்போதும் நடப்பதில்லை. தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகளாக இருப்பதில்லை.

இருப்பினும், எலியாவுக்குத் தேவனுடைய முழுமையான பதில் அனேக மாகப் பின்வருமாறு இருந்திருக்கும்: "எனது முழுமையான திட்டத்தின் அடுத்த படிக்கு வேளைவந்துவிட்ட காரணத்தினால் தண்ணீர் வற்றிப்போயிற்று. கவலைப்படாதே; என்னில் நம்பிக்கையாயிரு. எல்லாம் சரியாக நடைபெறும்."

# *சாறிபாத் ஊரில் தண்ணீரைத் தேவன் வற்றிப்போகச் செய்தது ஏன்? (17:8-16)*

*அது நம்மை, நமது வேதபாட வசனத்தின் மூன்றாவது பகுதிக்குக் கொண்டுவருகிறது (1 இராஜாக்கள் 17:8-16), அங்கு நாம், "சாறிபாத் ஊரில் தண்ணீரைத் தேவன் வற்றிப்போகச் செய்தது ஏன்?" என்று கேட்கிறோம்.*

> *அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று, அவர்: நீ எழுந்து சீதோனுக்கடுத்த சாறிபாத் ஊருக்குப் போய், அங்கே தங்கியிரு; உன்னைப் பராமரிக்கும்படி அங்கே இருக்கிற ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன் என்றார் (வசனங்கள் 8, 9).*

*இந்த வேளையில், கர்த்தருடனான ஒரு கற்பனை உரையாடலை நான் கண்டுபிடிக்கமாட்டேன். மாறாக, நீங்கள் எலியாவாக இருக்கிறீர்கள் என்றும் கர்த்தருடன் நீங்கள் கொண்டிருந்திருக்கக் கூடிய வகையிலான உரையாடலை நீங்களை உய்த்துணரும்படியும் நான் விரும்புவேன். பின்வரும் உண்மைகளை உங்கள் சிந்தையில் வைத்துக்கொள்ளுங்கள்:*

*(1) தேவன் இன்னமும் எலியாவை அரசரிடம் திரும்பிச் செல்லவோ அல்லது பிரசங்கிக்கச் செல்லவோ கேட்டுக்கொள்ளவில்லை. அவர் எலியாவை இடம்மாறும்படி மாத்திரம் கேட்டுக்கொண்டார். (2) அவரைத் தேவன் பஞ்சத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியில் இருந்து புறம்பே கிழக்கில் செல் லும்படி கேட்டுக்கொள்ளவில்லை. மாறாக அவர் எலியாவை பஞ்சத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியினூடே வடகிழக்கில் எழுபத்தி ஐந்து அல்லது நூறுமைல் கள் செல்லும்படி கேட்டுக்கொண்டார். (3) அவர் இஸ்ரவேலில் இருந்து நேர்வடக்கில் இருந்த பெனிக்கியாவின் கடற்கரையோரத்தில் இருந்த சாறிபாத் என்ற ஒரு சிறுநகருக்குச் செல்லும்படி தேவன் பணித்தார். இது பொதுவாக யேசபேல் பிறந்து வளர்ந்த பகுதியாக இருந்தது! (4) அவர் எலியாவை அங்கு ஒரு செல்வந்தரான மனிதரின் மகிழ்வான இல்லத்தில் தங்கச் செய்யவில்லை. அவர் எலியாவை அங்கு ஒரு விதவையின் சிறுமைப்பட்ட குடியிருப்பில் தங்கும்படி அளிப்புகளை ஏற்படுத்தினார்.*

*இந்த உண்மைகள் எல்லாவற்றையும் ஒன்றுகூட்டி வைத்தால், நீங்கள் "ஏன்?" என்று கதறுவதற்கு வாய்ப்புள்ளது. அப்படியென்றால் பதில் திரும்பவும் வருகிறது: "எனது வழிகள் உங்களுடைய வழிகளாக இருப்பதில்லை!"*

*இந்தப் புதிய அறிவுறுத்துதல்களுக்கு எலியா எவ்வாறு பதில்செயல் செய்தார்? அவரது மனதில் எந்தக் கேள்விகள் இருந்தாலும், அவர் தேவன் கூறியதைச் செய்தார்: "அப்படியே அவன் எழுந்து, சாறிபாத்துக்குப் போனான்" (வசனம் 10).*

*"அப்படியே அவன் எழுந்து, சாறிபாத்துக்குப் போனான்"! என்று தமிழில் உள்ள இந்த ஐந்து வார்த்தைகளில் எவ்வளவு விஷயங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இது எலியாவுக்குப் பலநாட்கள் எடுத்துக்கொள்ளக் கூடிய ஒரு பயணமாக இருந்தது. இது அவரை, ஒவ்வொருவரும் வேட்டையாடிக் கொண்டிருந்த ஒரு எல்லைப் பகுதியினூடான பயணமாக இருந்தது, அங்கு அவர், உயிருடன் இருந்தவர்களிலேயே மிகவும் அஞ்சப்படவும் வெறுக்கப்படவுமான*

மனிதராக இருந்தார், அங்கு அவர் சுலபமாக அடையாளம் கண்டுகொள்ளப்படக் கூடியவராக இருந்தார். இது தண்ணீரற்ற ஒரு கடினமான நீண்ட பயணமாக, நாள் முழுவதும் சூரியன் சுட்டெரிக்கும் பயணமாக இருக்கும்; பூமி இரும்பைப் போலக் கடினமாக, மாபெரும் பிளப்புகள் நிரம்பியதாக இருக்கும்; ஒவ்வொரு அடிவைப்பிற்கும் புழுதி பறக்கும். அவர் தாவரங்களே இல்லாத, இறந்துபோன மிருகங்களின் உலர்ந்த உடல்களும் வெளிறிய எலும்புகளும் சிதறிக்கிடக்கும் ஒரு நிலப்பரப்பில் பயணம் செய்வார். எலியா தமது பயணத்தின்போது ஏதேனும் வீடுகளைக் கடந்துசெல்வார் என்றால், அவர் பசியும் தாகமும் கொண்ட பிள்ளைகளின் கதறல்களினால் எண்ணம் குலைக்கப்படுவார். "அப்படியே அவன் எழுந்து, சாறிபாத்துக்குப் போனான்" என்ற ஐந்து வார்த்தைகளில் இவையாவையும் மறைமுகமாக உணர்த்தப்பட்டுள்ளது.

கரடுமுரடான அந்தப் பயணம் கடைசியில் முடிவடைந்து அவர் சாறிபாத் ஊருக்கு வந்தார். அவர் அங்கு வந்தபோது, அது அவர் கற்பனை செய்திருந்ததைக் காட்டிலும் மிகவும் மோசமானதாக இருந்தது, *ஏனெனில் சாறிபாத்தின் தண்ணீரையும் தேவன் வற்றிப்போகச் செய்திருந்தார்* (வசனம் 14ஐக் கவனியுங்கள்)!

அவரைப் பராமரிப்பதற்குத் தேவன் ஆயத்தப்படுத்தியிருந்த விதவையையே அவர் அங்கு முதன் முதலாகக் கண்டார். அவள் என்ன செய்துகொண்டிருந்தாள்? அவள் தனக்கும் தனது மகனுக்கும் கடைசியாக ஒரு உணவைத் தயாரிப்பதற்கு விறகுபொறுக்கிக் கொண்டிருந்தாள். இந்த விதவையிடம் எதுவும் இருக்கவில்லை; அவள் பட்டினியின் முனையில் இருந்தாள்! தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகளாக இருப்பதில்லை!

இந்த வரலாற்றின் எஞ்சியபகுதியை நீங்கள் அறிவீர்கள். எலியா அவளிடத்தில் குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரும்படி கேட்டுக்கொண்டார். அவள் அதைக் கொண்டுவரத் திரும்பிய போது, அவர் அவளிடத்தில் அப்பம் கேட்டார். அவள் தனது மிகக் கொடிதான வறுமையைப் பற்றி வெளிப்படுத்தியபோது, அவளிடத்தில் அவர், தம்முடன் அவள் தனக்கிருப்பதைப் பகிர்ந்துகொண்டால், "கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள்மட்டும் பானையின் மா செலவழிந்துபோவதும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோவதும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்" என்று கூறினார் (வசனம் 14). அது மிகச்சரியாக அவ்வாறே நடந்தது.

சாறிபாத் ஊரில் தண்ணீரைத் தேவன் வற்றிப்போகச் செய்தது ஏன்?

பின்வருபவை சில காரணங்களாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை: (1) ஏனென்றால், இஸ்ரவேலில் இடர்ப்பாடு உண்மையில் வடக்கில் இருந்துதான் வந்தது மற்றும் அவர்கள் அதன் விளைவுகளைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பது பொருத்தமானதாக இருந்தது, (2) எலியா தேவனை முற்றிலும் சார்ந்திருக்க வேண்டும் என்பதை அவருக்குத் தொடர்ந்து வலியுறுத்துவதற்காக, மற்றும் (3) யெகோவாவே உண்மையான தேவனாக இருந்தார் என்பதை ஒரு ஏழை விதவை நம்பி இணங்கச் செய்வதற்காக.

## முடிவுரை

வாழ்வில் நமக்கு என்ன நடந்தாலும், தேவன் நம்மை மறந்துவிடுவ

*தில்லை, நம்மைக் கைவிட்டுவிடுவதில்லை, ஆனால் இன்னமும் அவர் நம்மீது அன்புகூர்ந்து நம்மைப் பராமரிக்கிறார், நம்மைப் பாதுகாப்பார் மற்றும் நமக்குத் தேவையானவற்றை அளிப்பார் என்பதை நாம் உணர்ந்தறிதல் எவ்வளவு முக்கியமானதாக உள்ளது.*

*சிலவேளைகளில் நாம் ஏசாயா 49:14ல் இருப்பவர்களைப் போல் உணரலாம்: "கர்த்தர் என்னைக் கைவிட்டார், ஆண்டவர் என்னை மறந்தார்." அப்படியென்றால் நாம், அடுத்த இரு வசனங்களை ஜாக்கிரதையாகக் கவனிப்பது அவசியமாக உள்ளது:*

> *"ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்" (வசனங்கள் 15, 16).*

*இது, "நான் இதை அல்லது அதை எனது உள்ளங்கையைப் போல அறிந்திருக்கிறேன்." தமிழில் உள்ள "உள்ளங்கை நெல்லிக்கனி போல" என்ற சொல்விளக்கத்தை நாம் பெறும் இடமாக இருக்கலாம். தேவன், "உன்னை நான் எனது உள்ளங்கையைப் போல அறிந்திருக்கிறேன். நீ எப்போதும் என் மனதில் இருக்கிறாய், மற்றும் நான் உன்னை ஒருக்காலும் மறப்பதில்லை!" என்று கூறுகிறார்.*

*இங்கு எலியாவின் அனுபவத்தில் இருந்து நாம் கற்றுக்கொள்ளக் கூடிய ஒருசில பாடங்கள் உள்ளன:*

*(1) நீங்கள் புரிந்துகொள்ளாது இருக்கும்போதும்கூட, தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள்.*

*(2) நீங்கள் புரிந்து உணராது இருக்கும்போதுகூட, தேவனிடத்தில் நம்பிக்கை வையுங்கள்.*

*(3) நீங்கள் கொண்டுள்ளது எதுவானாலும், நீங்கள் கொண்டிருக்க விரும்புபவற்றை நீங்கள் கொண்டிராது இருக்கும்போதும்கூடத் தேவனுக்கு நன்றிசெலுத்துங்கள். உங்கள் தேவைகளைத் தேவன் அறிகிறார், மற்றும் அவர் "தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக நடத்துகிறார்" (ரோமர் 8:28).*

---

குறிப்புகள்

*[1]இவ்விடத்தில் உள்ள எபிரெய வார்த்தை, "காகங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட வேண்டுமா அல்லது "வர்த்தகர்கள்" அல்லது "அரபியர்கள்" என்பது போன்ற மனித முகமையைச் சுட்டிக்காட்டும் சில வார்த்தைகளாக மொழிபெயர்க்கப்பட வேண்டுமா என்பது பற்றிச் சில தர்க்கங்கள் உள்ளன. நான் அறிந்துள்ள வரையில், எல்லா மொழிபெயர்ப்புகளும், காகங்கள் என்ற வார்த்தையையே கொண்டுள்ளன. எலியாவின் வரலாற்றில் உள்ள அற்புதரீதியான கூறுகளை ஒருவர் ஏற்றுக்கொள்கிறார் என்றால், இந்த எபிரெய வார்த்தையை "காகங்கள்" என்று மொழிபெயர்ப்பதை விட மாறுபட்ட வேண்டுகோள் எதுவும் இராது. [2]இவ்விடத்தில் உள்ளூரில் நன்கு அறியப்பட்ட உணவு சேவையாளர் ஒருவரைப் பதிலியாக இட்டுக் கொள்ளுங்கள். [3]வேதபாட வசனத்தில் "யோர்தானுக்கு முன்பாக" என்றுள்ளது. பழைய ஏற்பாட்டில், இது பொதுவாக "யோர்தானுக்குக் கிழக்கில்" என்று அர்த்தப்படுகிறது. அந்த அமைவிடம் குறித்துக்*

*கல்வியாளர்கள் கருத்து ஒன்றுபடுவதில்லை. ஒரு எழுத்தாளர், அது "சவக்கடலுக்கு வடக்கில் ஒருசில மைல்கள் தூரத்தில்" இருந்தது மற்றும் அது "யோர்தானில் மேற்கு முக மாகப் பாய்ந்தோடியது" என்று கூறுகிறார்.*

## காட்சி - உதவிக் குறிப்புகள்

*"**தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகளாக இருப்பதில்லை**" என்ற வாசகம் கொண்ட பெரிய அட்டை ஒன்றைத் தயாரித்துக் கொள்ளுங்கள். இந்தச் சொற்றொடர் இப்பாடத்தில் முதன்முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ள இடத்தில், அந்த அட்டையை உயர்த்திப் பிடித்து கூடியிருக்கும் யாவரையும் அதில் உள்ளதை உரக்க வாசிக்கும்படி கேட்டுக்கொள்ளுங்கள். அவ்வப்போது நீங்கள் அந்த அட்டையை உயர்த்திப் பிடிப்பீர்கள் என்றும், அப்போது ஒவ்வொருவரும் அந்த வார்த்தைகளைக் கூற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுங்கள். இந்தப் பாடத்தில் அந்தச் சொற்றொடர் தோன்றும் ஒவ்வொரு வேளையையும் குறித்துக்கொண்டு, ஒவ்வொரு வேளையிலும் அந்த அட்டையை உயர்த்திப் பிடியுங்கள்.*

## பாட வரைகுறிப்பு

I. *இஸ்ரவேலில் தண்ணீரைத் தேவன் வற்றிப்போகச் செய்தது ஏன் (17:1)?*
   - A. *இஸ்ரவேலில் நடந்தது என்ன என்பதை நாம் மறுகண்ணோட்டம் இடுவோமாக.*
     1. *உபாகமம் 7:1-6ல் உள்ள, சுற்றிலும் இருந்த மக்களினங்களில் இருந்து கலப்புத் திருமணம் செய்துகொள்ள வேண்டாம் என்ற எச்சரிக்கையைக் கவனியுங்கள். இந்த எச்சரிக்கை கைக்கொள்ளப்படவில்லை. ஆகாபின் அருகில் யேசபேல் இருக்கிறாள்.*
     2. *தேவன் தமது அச்சுறுத்துதல்களைச் செயல்படுத்த என்ன செய்வார்? அவர் ஆகாபினிடத்தில் எலியாவை அனுப்பினார்: 1 இராஜாக்கள் 17:1. "வருடங்கள்" என்றவார்த்தையைக் கவனியுங்கள்; மூன்றரை ஆண்டுகளாக மழைபெய்யாருந்தது (லூக்கா 4:25; யாக்கோபு 5:17).*
   - B. *இஸ்ரவேலில் தண்ணீரைத் தேவன் வற்றிப்போகச் செய்தது ஏன்?*
     1. *தேவனுடைய எச்சரிக்கையை (உபாகமம் 7) பின்தொடர்ந்த விஷயமாக இது உள்ளது (உபாகமம் 11:16, 17). மழை பெய்யாதிருக்க வேண்டும் என்று எலியா ஜெபித்தார் (யாக்கோபு 5:17). தேவன் உபாகமம் 11ல் என்ன செய்வதாக அச்சுறுத்தியிருந்தாரோ, அதைச் செய்ய வேண்டும் என்று அவர் எலியா ஜெபித்தார் என்பது தெளிவு.*
     2. *"ஏன்?" என்ற கேள்விக்குத் தேவன் பதில் அளிக்கலாம்:*
        - a. *"ஏனென்றால் எனது குரலுக்கு மக்கள் கீழ்ப்படியவில்லை மற்றும் அவர்கள் தண்டனைக்குப் பாத்திரராக*

இருக்கின்றனர்."

b. "ஏனென்றால் எனது உண்மையுள்ள ஊழியக்காரனான எலியா ஊக்கமாக ஜெபித்தார்."

c. "நானே தேவன் என்று காண்பிக்க; எனது மக்கள் மனந்திரும்பி என்னிடமாய்த் திரும்பும்படிக்கு, அவர்களின் வழிகளின் தவறை அவர்களுக்குக் காண்பிக்க." கேரீத் ஆற்றில் தண்ணீரைத் தேவன்.

II. வற்றிப்போகச் செய்தது ஏன்? (17:2-7).

A. ஆகாபுக்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டதற்குப் பின்னர், தேவன் தமது திட்டத்தின் இரண்டாவது படியைக் கொடுத்தார்.

1. எலியா ஒருவேளையில் ஒரு அடிவைப்பைச் செய்யும்படி கூறப்பட்டார்.

2. இரண்டாவது அடிவைப்பு என்பது எதிர்பாராததாக இருந்து: "நீ கேரீத் ஆற்றண்டை சென்று அங்கே காத்திரு" (வசனங்கள் 3, 4).

3. செய்யும்படி தேவன் கூறியதை எலியா செய்தார் (வசனங்கள் 5, 6).

a. "கேரீத்" என்றால் "துண்டிக்கப்பட்டிருத்தல்" அல்லது "பிரிந்திருத்தல்" என்று அர்த்தப்படுகிறது. ஒரு ஆண்டு அல்லது அதற்குச் சற்று அதிகமான காலம், எலியா மற்ற எல்லாரிடத்திலும் இருந்து துண்டிக்கப்பட்டு, அந்த ஆற்றின் கரையில் தங்கியிருந்தார்.

b. செயலற்ற இந்தக் காலம் எலியாவுக்குக் கடினமாக இருந்திருக்க வேண்டும்.

B. பின்பு தேவன் கேரீத் ஆற்றின் தண்ணீரை வற்றிப்போகச் செய்தார்!

1. எலியா எங்கிருக்க வேண்டும் என்று தேவன் விரும்பினாரோ அங்கேயே இருந்தார், ஆனால் அங்கிருந்த தண்ணீர் வற்றிப்போயிற்று! (வசனம் 7).

2. கேரீத் ஆற்றில் தண்ணீரைத் தேவன் வற்றிப்போகச் செய்தது ஏன்?

a. ஏனென்றால் எலியா அதற்காக ஜெபித்திருந்தார் (வசனம் 7; யாக்கோபு 5:17). சில வேளைகளில் நமது ஜெபங்களுக்கு நாம் எதிர்பாராத வகையில் பதில் அளிக்கப்படுகிறது.

b. ஏனென்றால் அடுத்த அடிவைப்பிற்கான வேளை வந்திருந்தது. நமது வாழ்வில் நாம், தேவன் மீதும் அவர் நமக்காகக் கொண்டுள்ள திட்டத்தின் மீதும் நம்பிக்கை வைக்கக் கற்றுக்கொள்வது அவசியமாக உள்ளது.

III. சாறிபாத் ஊரில் தண்ணீரைத் தேவன் வற்றிப்போகச் செய்தது ஏன்? (17:8-16)?

A. தேவன் எலியாவை சாறிபாத் ஊருக்குப் போகும்படி கூறினார் (வசனங்கள் 8, 9).

1. சாறிபாத் என்பது இஸ்ரவேலுக்கு நேர் வடக்கில் இருந்த பெனிக்கியா நாட்டின் கடற்கரை ஓரத்தில் இருந்த ஒரு சிறிய நகரமாகும். இது எலியா இருந்த இடத்தில் இருந்து வடகிழக்கில், பஞ்சத்தினால் தாக்கப்பட்டிருந்த பகுதி யினூடாக 75 முதல் 100 மைல்கள் வரை தூரமுள்ளதாக இருந்தது. எலியா இன்னமும் சிறுமையான வாழ்வைக் கொண்டிருக்க வேண்டியதாக இருந்தது. அவர் அங்கு ஒரு விதவையின் வீட்டில் தங்கி இருக்க வேண்டியதாயிற்று.
2. எலியா எவ்வாறு பதில்செயல் செய்தார்? "அவர் எழுந்து சென்றார்."

B. எலியா அங்கு சென்றபோது, அங்கும் கூடத் தண்ணீர் வற்றிப்போயிற்று!

1. அவர் யாருடன் தங்கியிருக்க வேண்டியதாக இருந்ததோ, அந்த விதவை பட்டினியால் மரித்துக்கொண்டிருந்தாள்!
2. சாறிபாத் ஊரில் தண்ணீரைத் தேவன் வற்றிப்போகச் செய்தது ஏன்?
   a. இஸ்ரவேலில் இடர்ப்பாடுகள் வடக்கில் இருந்தே வந்திருந்தன; ஆகையால், அந்த இடர்ப்பாடுகளின் விளைவுகளை அவர்களும் பகிர்ந்துகொள்ள வேண்டியதாக இருந்தது.
   b. எலியா முற்றிலுமாகத் தேவனைச் சார்ந்திருக்க வேண்டும் என்பதை அவருக்குத் தொடர்ந்து வலியுறுத்துவதற்காக.
   c. யொகோவாவே உண்மையான தேவனாக இருக்கிறார் என்பதை ஒரு ஏழை விதவை நம்பி இணங்கச் செய்வதற்காக.

முடிவுரை

A. வாழ்வில் நமக்கு என்ன நடந்தாலும், தேவன் நம்மை மறந்துவிடுவதில்லை, நம்மைக் கைவிட்டுவிடுவதில்லை, ஆனால் இன்னமும் அவர் நம்மீது அன்புகூர்ந்து நம்மைப் பராமரிக்கிறார், நம்மைப் பாதுகாப்பார் மற்றும் நமக்குத் தேவையானவற்றை அளிப்பார் என்பதை நாம் உணர்ந்தறிதல் எவ்வளவு முக்கியமானதாக உள்ளது (ஏசாயா 49:14-26)!

B. இங்கு, 1 இராஜாக்கள் 17:1-15ல் இருந்து மாபெரும் பாடங்களில் ஒருசில உள்ளன:

(1) நீங்கள் புரிந்துகொள்ளாது இருக்கும்போதுகூட, தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள்.
(2) நீங்கள் புரிந்து உணராது இருக்கும்போதும்கூட, தேவனிடத்தில் நம்பிக்கை வையுங்கள்.
(3) நீங்கள் கொண்டுள்ளது எதுவானாலும், நீங்கள் கொண்டிருக்க விரும்புபவற்றை நீங்கள் கொண்டிராது இருக்கும்போதும்கூடத் தேவனுக்கு நன்றிசெலுத்துங்கள்.